[20ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 130க்கான விடையைக் காண்க.]

இணைப்பு I.

(அ) & (ஆ) : காவிரி கயவாய்ப் பகுதி ஏற்பாட்டினைக் காலத்திற்கேற்ப மாற்றியமைக்கும் திட்டத்தின்கீழ், காவிரி கயவாய்ப் பகுதி பாசன ஏற்பாட்டில் தற்போதுள்ள கால்வாய்களைத் தரப் படுத்தியும் வடிகால்களையும், ஓடைகளையும் மேம்படுத்தியும் பொறி மதகுகள் முதலியவற்றைக் கட்டியும் அதனை மேம்படுத்தக் கருதப்பட்டுள்ளது. இவ்வாறு மேம்படுத்துவதன் மூலம் காவிரி கயவாய்ப் பகுதி முழுவதிலும் சமமான அளவிலும் உரிய காலத்திலும் நீர் வழங்குவது உறுதி செய்யப்படும். அது மட்டுமன்றி, கடைமடைப் பகுதிகளில் வடிகால்களில் ஏற்படுகின்ற நெருக்கடியும் குறைக்கப்படும்.

பழைய காவிரி கயவாய்ப்பகுதி ஏற்பாட்டினை நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ் கீழ்க்காணும் பணிகளைச் செய்யத் திட்டமிடப் பட்டுள்ளது :

(1) கல்லணையின் உறுதியை மேம்படுத்தும் வகையிலும் வெள்ளத்தைத்திறமையாகக் கட்டுப்படுத்தும் வகையிலும்அதனை வலுப்படுத்துவது.

(2) முதன்மையாறுகளுக்கும் கிளையாறுகளுக்கும் பின் வரும் வகையில் சீரமைப்புகளைச் செய்தல்—

(அ) அவசியமான இடங்களில் கரைகளை வலுப் படுத்துதல் ;

(இ) ஆறுகளிலும் கிளையாறுகளிலும் தெரிந்தெடுத்த பகுதிகளில் கரைகளைக் கட்டுதல் ;

(உ) முதன்மையாறுகளிலும், கிளையாறுகளிலும் பொறி மதகுகளைக் கட்டுதல், படுகை அணைகளை பொறி தமகு அணைகளாக மாற்றுதல்.

(3) 'ஏ' வகுப்பைச் சேர்ந்த கால்வாய்களுக்கும் 50 ஏக்கர் வரை பாசனம் தருகின்ற அதன் கிளை கால்வாய்களுக்கும் பின்வருவன போன்று சீரமைப்புச் செய்தல் :—

(அ) இந்தக் கால்வாய்களை சீரமைத்துத் தர நிலைக்கு கொண்டு வருதல், மேலும் இவற்றில் பகுப்பு அணைகளையும் பிளவுக்கால்களையும் (Notches) அளவீட்டுச் சுவர்கள் முதலிய வற்றையும் அவசியமான இடங்களில் கட்டுதல் ;

1679 பிப்ரவரி 22]

(இ) திறந்தகால்வாய்கள் பிரியுமடங்கள், அனைத்திலும் கற் கட்டிடத்திலான அல்லது குழாய்களாலான மதகுப் பொறிகளையமைத்தல், கால்வாய்களை நேராக அமைத்தலும் அவற்றின் தரங்களைத் திருத்தியமைத்தலும், கால்வாய்களை அவசியமான இடங்களில் வண்டல்களை அகற்றுதல்.

(4) பின்வரும் நடவடிக்கைகள் மூலம் காவிரி கயவாய்ப் பகுதியில் வடிகால் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தல்—

(அ) காவிரிக் கிளையில் மேல் அணைக்கட்டுக்கு முன்னர் குறுக்காக ஒரு தடுப்பு அணையைக் கட்டுவதன் மூலம் காவிரியில் வெள்ளம் புகுதலைக் கட்டுப்படுத்துதல்;

(இ) மேட்டு நிலங்களிலிருந்து பெருகி வருகின்ற வெள்ளத்தைத் திசை திருப்பி அல்லது தடுத்து வெள்ளத்தால் விளையும் சேதத்தைக் குறைத்தல் ;

(உ) முடிந்த அளவிற்கு அதிகம் நீரைத் தாங்கிக்கொள்ள இயலும் வகையில் தற்போதுள்ள வடிகால்களை அவசியமான இடங்களில் சீரமைத்தல்; அல்லது, இவ்வாறு பெருகும் வெள்ளப் பெருக்கினை சமாளிக்கும் வகையில் தற்போதுள்ள வடிகால்களையே சீரமைத்திட முடியாமற் போனால், கூடுதல் வடிகால்களைக் வெட்டுதல் ;

(எ) கடலுக்கு சென்று விழுகின்ற நேரடியான வடிகால்களை அமைத்தல், தற்போதுள்ள வடிகால்கள் வளைந்து வளைந்து செல்லுமானால், அவற்றை நேராக்குதல் ;

(ஒ) வடிகால்கள் பெருகி விழுகின்ற இடங்களில் அவை தேங்கிப் பெருக விடாமல் தடுக்கும் பொருட்டு அத்தகைய இடங்களில் அவற்றைக் கட்டுப்படுத்துதல்.

(5) கீழ்க் கொள்ளிட அணைக்கட்டில் உள்ள மதகுக் கதவுகளைப் புதுப்பித்தும் அங்கு மின்விசை மூலம் மதகுகளை ஏற்றுவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்தும் அவ்வணைக்கட்டுக்குச் சீரமைப்புகளை செய்தல்.

(6) ஒவ்வொரு வயலுக்கும் பாசன வாய்க்கால், வடிகால் அமைத்துத் தருவது, கரைகளைத் திருத்தியமைப்பது போன்ற வயல் சார்ந்த பணிகளை நிறைவேற்றுதல்,